



dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்





| Vol: 02 | Issue: 283 | 4 Pages | 10.5.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 283 | 4 பக்கங்கள் | 10.5.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்**
**களவறிந்தார் நெஞ்சில் கரவு**

**விளக்கம்: அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் நிற்கும் அறம் போல் களவு செய்து பழகி அறிந்தவரின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.**

## இந்தியாபாகிஸ்தான் போரால் யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்? ஈரான் வெளியிட்ட பதிவு



டெஹ்ரான், மே.10

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பதிலடி தாக்குதல் நடத்தியது.

இந்ததாக்குதலில்பாகிஸ்தான்மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்தது. இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியுள்ளது.

இந்நிலையில் இந்தியாபாகிஸ்தான் இடையே போர் ஏற்பட்டால் அதனால் யாருக்கு லாபம் ஏற்படும்? யாருக்கு நஷ்டம் ஏற்படும்? என 'எக்ஸ்' வலைதளத்தில் ஈரான் ராணுவம் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"பாகிஸ்தான்இந்தியா போரால் யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்? என்ன நடக்கும்?

வெற்றியாளர்கள்:

1 அமெரிக்கா

★இருதரப்பினருக்கும்ஆயுதங்களைவிற்பனைசெய்வார்கள்(பாகிஸ்தானின் ஆயுதங்களில் 40% அமெரிக்காவில் இருந்து வருகிறது)

★ பாகிஸ்தானை நிலைகுலைய செய்வதன் மூலம் சீனாவை பலவீனப்படுத்துவார்கள்.

2 இஸ்ரேல்

★ இந்தியாவிற்கு டிரோன் விற்பனை செய்வார்கள் (Hermes 900)

★ காசா போர்க்குற்றங்களை திசை திருப்புவார்கள்.

★ ஏவுகணை கூட்டு உற்பத்தியில் லாபம் கிடைக்கும் (Barak8)

★ பாதுகாப்பிற்காக இந்தியாவின் ஐ.நா. வாக்குகளைப் பயன்படுத்தும்.

★ ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை (Arrow3) இந்தியாவிற்கு விற்பனை செய்யும்.

3 பயங்கரவாத குழுக்கள்

★ ஐ.எஸ்.ஐ.எஸ்., அல்கொய்தா உள்ளிட்ட அமைப்புகள் காஷ்மீரில் ஆட்சேர்ப்பு நடத்தும்.

4 ஆயுத தொழில் துறை

★ லாக்ஹீட் மார்ட்டின் மற்றும் பிறர் ஆயுத ஒப்பந்தங்களில் இருந்து லாபம் பெறுவார்கள்

தோல்வியடைபவர்கள்:

1. பொதுமக்கள்:

★ நிரந்தரமாக பாதிக்கப்படுவார்கள்

★ உயிரிழப்பவர்களில் 75% பேர் போராளிகள் அல்லாதவர்களாக இருப்பார்கள்.

★ விநியோக சங்கிலி சரிவால் 140 மில்லியன் பேர் பஞ்சத்தை எதிர்கொள்வார்கள்.

★ 20 மில்லியனுக்கும் அதிகமானோர் அகதிகள் ஆவார்கள்.

★ காஷ்மீர் முகாம்கள் 4 மடங்காக நிரம்பி வழியும்.

2. தேசிய பொருளாதாரங்கள்:

★ பாகிஸ்தான்: திவால்நிலைக்கு அருகில் செல்லும் (போருக்கு 77% வருவாய் செலவிடப்படும்)

★ இந்தியா: 45% ரூபாய் சரிவு, $90 பில்லியன் தொழில்நுட்பத்துறை இழப்பு

3. சுற்றுச்சூழல் பேரழிவு

★ யுரேனியம் விஷம் கலந்த நீர் (1999 போல்)

★ காஷ்மீரின் 60% காடுகள் எரியும்

உண்மை நிலவரம்: இந்தப் போரை ஆதரிக்கும் எந்த நாடும் அல்லது நடிகரும் இரு தரப்பினருக்கும் எதிரிதான். இந்தப் போர் மேற்கு நாடுகள் மற்றும் இஸ்ரேலுக்கு மட்டுமே உதவும். இது ஆயுத வியாபாரிகளை வளப்படுத்தவும், தெற்காசியாவை அழிக்கவும் உருவாக்கப்பட்ட நெருக்கடி ஆகும்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளை புகை வெளியேறியது; புதிய போப் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்



வாடிகன் நகரம், மே.10

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்த போப் பிரான்சிஸ் கடந்த மாதம் 21ந்தேதி உடல் நலக்குறைவால் காலமானார். அவரது உடல் 26ந்தேதி ரோமில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் 9 நாட்கள் வாடிகனில் துக்கம் அனுசரிக்கப்பட்டது. இந்த நடைமுறைகளுக்குப்பின் புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்வதற்கான ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இதற்காக, சிஸ்டைன் ஆலயத்தில் 80 வயதுக்கு உட்பட்ட 133 கார்டினல்கள் கூடி தங்களுக்கு உள்ளேயிருந்து ஒருவரை அடுத்த போப் ஆண்டவராக தேர்வு செய்வார்கள். அதில் 3ல் 2 பங்கு ஆதரவு பெறும் (89 வாக்குகள்) கார்டினல் புதிய போப் ஆண்டவராக தேர்வு செய்யப்படுவார்.

எனினும், புதிய போப்பை தேர்வு செய்வதில் தொடர்ந்து இழுபறி நடந்து வருகிறது. இதற்கான வாக்கெடுப்பு நேற்று நடந்தது. ஆனால், அது தோல்வி அடைந்தது. இதனை உணர்த்தும் வகையில் சிம்னி வழியே, கரும்புகையை வெளியேற்றி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தநிலையில், 2வது நாளாககார்டினல்கள்கூடியநிலையில், வாக்கெடுப்பு இன்றும் தோல்வி அடைந்தது. இதனை உணர்த்தும் வகையில் சிம்னி வழியே மீண்டும், கரும்புகையை வெளியேற்றி அறிவிப்பு வெளியானது.

இந்நிலையில், புதிய போப் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் என குறிக்கும் வகையில், சிம்னியில் இருந்து இன்றிரவு வெள்ளைபுகை வெளியேறியுள்ளது. இதனால், வெற்றி பெற்றவர் 89 ஓட்டுகளை பெற்றிருக்கிறார் என்பது தெரிய வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த மக்கள் ஆரவாரத்தில் கூச்சலிட்டனர். புதிய போப்பின் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

அப்போது, தலைமை கார்னல், செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் இருந்து நமக்கு ஒரு போப் கிடைத்து விட்டார் என லத்தீனில் கூறுவார். இதன்பின்னர், வெற்றி பெற்றவரின் பிறந்தபோது வைக்கப்பட்ட பெயரை லத்தீனில் கூறுவார். அதன்பின்பு, அவரை அழைப்பதற்கான பெயர் வெளியிடப்படும்.

இதனை தொடர்ந்து, முதன்முறையாக அதே செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் இருந்து பொதுமக்கள் முன் புதிய போப் ஆண்டவர் தோன்றி, ஆசி வழங்குவார்.

# திருச்சியில் ரூ.57.45 கோடியில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட அரசு மாதிரி பள்ளியை முதல்வர் திறந்து வைத்தார்: தைரியமாக தேர்வை எதிர் கொள்ள மாணவர்களுக்கு அறிவுரை

சென்னை, மே.10

திருச்சி துவாக்குடியில் ரூ.57.45 கோடியில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள திருச்சி மாவட்ட அரசு மாதிரி பள்ளியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று களஆய்வு செய்து பல்வேறு முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வருகிறார். அந்த வகையில் திருச்சி மாவட்டத்தில் முடிவுற்ற பல்வேறு பணிகளை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்ட 2 நாள் பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையில் இருந்து இண்டிகோ விமானம் மூலம் நேற்று பிற்பகல் 12.10 மணியளவில் திருச்சி வந்தார். விமான நிலையத்தில்முதல்வருக்கு, அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ், ரகுபதி, மெய்யநாதன், எம்பிக்கள் திருச்சி சிவா, அருண் நேரு, துரை வைகோ ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். பள்ளி கல்வித்துறை முதன்மை செயலாளர் சந்திரமோகன், கலெக்டர் பிரதீப்குமார், மாநகர போலீஸ் கமிஷனர் காமினி, திருச்சி சரக டிஐஜி வருண்குமார், எஸ்பி நாகரத்தினம், எம்எல்ஏக்கள் பழனியாண்டி, கதிரவன், அப்துல் சமத், சவுந்தர பாண்டியன், காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், இனிகோ இருதயராஜ், மேயர் அன்பழகன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

தொடர்ந்து, சாலை மார்க்கமாக துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு 12.50 மணிக்கு வந்த முதல்வருக்கு, திருச்சி சரக டிஐஜி வருண்குமார் தலைமையில் மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் முதல்வருக்கு அமைச்சர்கள் நூல்கள் கொடுத்து வரவேற்றனர். தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பள்ளி முன் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்ததுடன், ரூ.57.45 கோடியில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள திருச்சி மாவட்ட அரசு மாதிரி பள்ளிக்கான புதிய கட்டிடத்தையும், தரை மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர்களுக்கான தனித்தனி விடுதி கட்டிடங்களையும் திறந்து வைத்தார். தொடர்ந்து பள்ளிக்குள் சென்ற முதல்வர் வகுப்பறை, எல்இடி திரைகள், ஆய்வு கூடங்களை பார்வையிட்டார். பள்ளிக்கு சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினை மாணவ, மாணவிகள் ரோஜா பூ கொடுத்து வரவேற்றனர். அப்போது வகுப்பறையில் மாணவ, மாணவிகளுடன் பெஞ்சில் அமர்ந்து எல்இடி மெகா திரையில் ஒளிபரப்பான மாதிரி பள்ளியின் ஒரு பயணம் என்ற 10 நிமிடம் ஓடிய காணொலி காட்சியை பார்வையிட்டார்.



தொடர்ந்து, ஆசிரியர்களிடம் மாணவர்களை போட்டி தேர்வுகளில் வெற்றிபெற செய்ய தேவையான முயற்சிகளை அளிக்கும்படி அறிவுறுத்தினார். அப்போது திருச்சி துறையூர், கொப்பம்பட்டியை சேர்ந்த 12ம் வகுப்பு மாணவிகள் கமலபிரியா, மருங்காபுரி வட்டத்தை சேர்ந்த ரம்யா ஆகியோருடன் முதல்வர் கலந்துரையாடினார். இதுகுறித்து மாணவி கமலபிரியா மற்றும் ரம்யா கூறுகையில்,'' நீட் தேர்வை எதிர்கொள்ள தேவையான பாடப்பிரிவை படித்து வருகிறேன். மாதிரி பள்ளியில் நீட் தேர்வை எதிர் கொள்ள தேவையான அனைத்து பாடத்திட்டங்களும் முழுமையாகவும், எளிதாக புரியும்படியும் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர். அதுமட்டுமின்றி பாடத்திட்டத்தை தாண்டி கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் விதமாக ஆசியர்கள் பயிற்சி அளிக்கின்றனர். முதல்வர் என்னிடம் பேசும் போது, தேர்வை தைரியமாக எதிர்கொள்ள வேண்டும் என்றும், எந்த தயக்கமும் இன்றி ஆசிரியர்களிடம் சந்தேகங்களை கேட்டு நன்கு அறிந்து கொண்டு பயில வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இந்த மாதிரி பள்ளியை கட்டி தந்து எங்கள் கனவை நோக்கி அழைத்துச்செல்லும் முதல்வருக்கு நன்றி,''என்றனர்.

மாணவர் எஸ்வந்த் ராஜ் கூறுகையில்,'' படிக்கும் போது ஏற்படும் சந்தேகத்தை ஆசிரியர்களிடம் அவ்வப்போது கேட்டு நன்கு தெளிவுபடுத்தி கொள்ள வேண்டும் என முதல்வர் அறிவுரை வழங்கினார்.

மேலும் ஆய்வகத்தை பார்வையிட்டு அங்கு உள்ள உபகரணங்கள் குறித்தும் அதன் செயல்முறை குறித்தும் கேட்டறிந்தார். அதிநவீன வசதிகள் கொண்ட இந்த ஆய்வகங்களில் செய்முறையுடன் படிக்கும்போது எளிதாக புரிகிறது. எதிர்வரும் காலங்களில் போட்டி தேர்வுகளில் தேர்ச்சி பெற இது பேருதவியாகஅமையும். இந்தவாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த முதல்வருக்கு நன்றி,'' என்றார்.

பின்னர் வெளியே வந்த முதல்வர், பள்ளி முன் மாணவ, மாணவிகளுடன் குரூப் போட்டோ எடுத்துக் கொண்டார்.

## மாநாட்டு நிபந்தனைகளை பின்பற்றுவதாக உத்தரவாதம் அளிக்க பா.ம.க.வுக்கு ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை மே.10

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாமல்லபுரத்தை அடுத்த வடநெமிலியில் வருகிற 11ம் தேதி சித்திரை முழு நிலவு மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டுக்கு தடை விதிக்க கோரி ஸ்ரீபெரும்புதூரைச் சேர்ந்த முத்துக்குமார் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்குதாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், சித்ரா பவுர்ணமி நாளில் பா.ம.க. மாநாடு நடத்துவதால் பக்தர்கள் பாதிக்கப்படுவார்கள்.

கடந்த 2013ம் ஆண்டு நடந்த மரக்காணம் கலவரம், 20 சதவீத இட ஒதுக்கீடு கோரி நடத்தப்பட்ட போராட்டங்களில் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்ததை சுட்டிக்காட்டிய மனுதாரர், சட்டம் ஒழுங்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் இந்த மாநாட்டுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் என். மாலா மற்றும் ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல், "மாநாடு நடக்கும் நாளில் கிழக்கு கடற்கரை சாலையை யாரும் பயன்படுத்த வேண்டாம்" என பா.ம.க. தலைவர் கூறியிருக்கிறார், என்றுகூறி அன்புமணி பேசிய வீடியோவை நீதிபதிகளிடம் காட்டினார்.

பா.ம.க. தரப்பில் ஆஜரான வக்கீல், "காவல்துறை விதித்துள்ள அத்தனை நிபந்தனைகளும் கண்டிப்புடன் பின்பற்றப்படும். எந்த அசம்பாவித சம்பவங்களுக்கும் இடம் கொடுக்காமல் அமைதியான முறையில் மாநாடு நடத்தப்படும்" என்று உறுதி அளித்தார்.



அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், "மாநாட்டுக்கு அனுமதி அளித்து பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளநிபந்தனைகள் கண்டிப்புடன் பின்பற்றப்படும் என்ற உத்தரவாத மனுவை வடக்கு மண்டல ஐ.ஜி.யிடம் வழங்க வேண்டும். மாநாட்டுக்கு வருபவர்கள் எந்த ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் எடுத்து வரக்கூடாது. மாநாட்டுக்கு வரும் வாகனங்கள் முறையாக காவல்துறையிடம் அனுமதி பெற்று வர வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

மேலும், மாநாட்டின் பாதுகாப்புக்காக கூடுதல் போலீசாரை பணியமர்த்த வேண்டும். மாநாடும், சித்ரா பவுர்ணமி விழாவும் அமைதியாக நடப்பதை உறுதி செய்யும் வகையில் கண்காணிக்க வேண்டும் என வடக்கு மண்டல ஐ.ஜி.க்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். தேவைப்பட்டால் கூடுதல் நிபந்தனைகளை விதிக்கலாம் என அரசுக்கு அனுமதி அளித்தும் உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்தனர்.

## சமூக சேவகரின் சேவையை பாராட்டி திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் குடியரசு தின விருது வழங்கி கௌரவித்தார்

தமிழக முழுவதும் ஆதரவற்ற முதியோர்களை மீட்டெடுப்பதையே சிறந்த சேவையாக கொண்டு செயல்படும் ஜெயக்குமார்சேவையின்பிறப்பிடமாகவே மாறி நெல்லை மாவட்டத்தில் பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகிறார்.

சாலையோரம் உள்ள ஆதரவற்ற முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை மீட்டெடுத்து உரிய பாதுகாப்பான காப்பகத்தில் சேர்த்தும் மற்றும் குடும்பத்தால் கைவிடப்பட்ட நோயாளிகளை மீட்டெடுத்து உரிய சிகிச்சை அளித்தும் வருகிறார். கடந்த மூன்று வருடத்தில் சேர்த்த 50க்கும் மேற்பட்ட உறவுகளை மாதம் ஒருமுறை நேரில் சென்று தேவையான உதவிகளை செய்தும் வருகிறார்.

தமிழ்நாடு அரசின் உயரிய கொள்கையான உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் வகையில் சமூக வலைதளம் மூலமாக 100க்கும் மேற்பட்ட நபர்களை அரசு மருத்துவமனையில் உடல் உறுப்பு தானத்திற்காக பதிவு செய்துள்ளன்


புற்றுநோயாளிகளின் மறுவாழ்விற்கு மகிழ்ச்சியை மலர் செய்யும் விதமாக 50க்கும் மேற்பட்ட நபர்கள் முடிதானம் செய்து புற்றுநோய் விழிப்பு ணர்வை ஏற்படுத்தி வருகிறா

அவசர தேவைக்காக இரத்ததானம் வழங்கியதோடு மட்டுமல்லாமல் தானும் ஒரு இரத்தக்கொடையாளராக இதுவரை 20க்கும் மேற்பட்ட முறை இரத்ததானம்செய்துள்ளார்

மேலும் கோடை காலத்தில் பறவைகளுக்கு உணவு மற்றும் நீர்வைக்கும் விழிப்புணர்வு, மரம் நடுதல், தினந்தோறும் யாசகர்களுக்கு உணவு வழங்குதல், பள்ளி கல்லூரி மாணவர்களிடையே சமூக விழிப்புணர்வு, தலசீமியா மற்றும் கேன்சர் நோய் விழிப்புணர்வை தொடர்ந்து மக்களிடம் ஏற்படுத்தி வருகிறார்.

இவரது சிறப்பான சேவையை பாராட்டி திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் குடியரசு தின விருது வழங்கி கௌரவித்தார். மேலும் பல்வேறு சமூக அமைப்பினர், சமூகப் பிரபலங்கள் , ஊர் பொதுமக்கள் ஆகியோர் இவரது சிறப்பான சேவையை தொடர்ந்து பாராட்டி வருவது நடைபெற்று வருகிறது.

நெல்லை மாவட்ட மக்களின் மத்தியில் நீங்கா இடம் பிடித்த ஜெயக்குமார் சேவைக்கு சிறந்த ஒரு உதாரணமாக திகழ்ந்து வருகிறார்.






சித்தார்த் இந்திய அளவிலான தேசிய ஸ்கேட்டிங் போட்டியில்டெல்லியில்பங்கேற்று1000மீட்டர்ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் 500 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்.



# கரையான் அரித்த ரூ.1 லட்சம் பணத்தை மாற்ற நடவடிக்கை: தொழிலாளி குடும்பம் நெகிழ்ச்சி



சிவகங்கை, மே.10

தினகரன்செய்தி எதிரொலியாக தொழிலாளியின் கரையான்அரித்த ரூ.1 லட்சம் மதிப்பிலான 500 ரூபாய் நோட்டுகளை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கிளாதிரி கக்கனம்பட்டியை சேர்ந்த தம்பதி குமார் முத்துக்கருப்பி. இவர்கள், ஓலை வேய்ந்த கூரைவீட்டில் வசித்து வருகின்றனர். இருவரும் கூலி வேலைக்கு சென்று கிடைத்த பணத்தை சிறுக சிறுக சேமித்து ரூ.500 நோட்டுகளாக மாற்றினர்.

பின்னர் ஒரு தகர உண்டியலில் வைத்து வீட்டினுள் குழி தோண்டி புதைத்து குழந்தைகளின் காதணி விழாவுக்காக சேமித்து வைத்திருந்தனர். ரூ.1 லட்சம்வரைஇருந்தபணத்தை கரையான் அரித்ததால் ரூ.500 நோட்டுகள் முழுமையாக சேதமடைந்தது. கரையான் அழித்த நோட்டை வங்கியில் மாற்ற முடியாததால் முத்துக்கருப்பி குடும்பத்தினர் செய்வதறியாது தவித்தனர். இதுதொடர்பாக நேற்று முன்தினம் (மே 7) தினகரன் நாளிதழில் படத்துடன் செய்தி வெளியானது.

இதுகுறித்த தகவல் அறிந்த கலெக்டர் ஆஷா அஜித் உடனடியாக சிவகங்கை தாசில்தார் சிவராமன் மற்றும் முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன்குமார் ஆகியோர், முத்துக்கருப்பியை சந்தித்து விசாரணை நடத்தினர். விதிமுறைகளின்படி கரையான் அரித்த நோட்டுகளுக்கு மதிப்பில்லை என்றாலும், கூலி வேலை செய்து சேமித்த பணம் சிதைந்ததால் கருணை அடிப்படையில் உதவியளிக்க பரிசீலனை செய்யப்படும் என அவர்கள் தெரிவித்தனர். சென்னையில் உள்ள ஆர்பிஐ தலைமையகத்தில் ரூபாய் நோட்டுகளை பரிசோதித்த பின் முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாககூலித்தொழிலாளி குமார்கூறியதாவது, ''கூலி வேலைகள் செய்து உழைத்த பணத்தை சேமித்து வைத்திருந்தோம். குழந்தைகளின் காதணி விழாவிற்காக பணத்தை எடுத்தபோது ஒரு லட்ச ரூபாய் வரை உள்ள பணம் கரையான் அரித்து வீணாகி விட்டதால் மிகுந்த வேதனையுடன் இருந்து வந்தோம். மாவட்ட நிர்வாகம் வருவாய்த்துறையின் ஏற்பாட்டில் முன்னோடி வங்கி மூலம் எங்களுக்கு பணம் கிடைக்க பரிந்துரை செய்துள்ளனர். இதற்காக கலெக்டர் வருவாய்த்துறையினர் வங்கி மேலாளர் ஆகியோருக்கு நன்றி'' என்றார்.

# மாற்று மதத்தை அவதூறாக பேசக்கூடாது சைவ மடங்களுக்குரிய மாண்பு மதுரை ஆதீனத்தால் குறைகிறது: தமிழக சிவ பக்தர்கள் குழு கண்டனம்



ஒட்டன்சத்திரம், மே.10

மதுரை ஆதீனத்தின் செயல்பாடுகளால் சைவ மடங்களின் மாண்பு குறைந்து வருகிறது என தமிழக சிவ பக்தர்கள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. தமிழக சிவ பக்தர்கள் குழு மாநிலதலைவர் விஸ்வரத்தினம் கூறியதாவது: தமிழ்நாட்டில் சைவ திருமடங்கள் மிகவும் தொன்மையானவை. இவைகளின் கீழ் பல்வேறு கோயில்கள் உள்ளன. இந்த கோயில்களில் மடாதிபதிகள் சைவ நெறிகளை, சைவ சித்தாந்தங்களை பக்தர்களுக்கு போதித்து சமதர்மத்தை வளர்த்து வருகின்றனர்.

சில மடாதிபதிகள் அரசியல்வாதிகள் போல் செயல்படுகின்றனர். அரசியல் அமைப்பு சட்டப்படி அனைவருக்கும் பேச்சு சுதந்திரம் உள்ளது என்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசக்கூடாது. கார்விபத்து குறித்து மதுரை ஆதீனம் உண்மைக்கு புறம்பாக பேசி வருகிறார். இதனால் சைவ மடங்களின் மீதான மாண்பு குறைந்து வருகிறது. மடாதிபதிகள் தங்களை பிரபலப்படுத்துவதில் முனைப்பாக உள்ளனர். சைவ நெறி சார்ந்த விழாக்களில் கலந்து கொள்வதை தவிர்த்து, வணிக நிறுவனங்களின் திறப்பு விழா உள்ளிட்ட பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதுபோன்ற சம்பவங்கள் எங்களைபோன்ற அடியார்கள்திருக்கூட்டத்திற்கு மிகுந்த வருத்தத்தை தருகிறது. பண்டைய காலத்தில் சைவ மடங்கள் எவ்வாறு உண்மையாக சைவ தொண்டு புரிந்ததோ, எவ்வாறு ஏழை எளியோர்களின் பசிப்பிணியை போக்கியதோ, அதேபோல மீண்டும் தர்ம சிந்தனை மற்றும் சமய சிந்தனையோடு செயல்பட வேண்டும். மாற்று மதத்தை அநாகரீகமாக பேசுவதை தவிர்த்து, சைவ சமய வளர்ச்சியில் பெரும் பங்காற்ற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# மனைவியுடன் தகாத உறவால் வெறிச்செயல் மர்ம உறுப்பை அறுத்து வங்கி ஊழியர் படுகொலை: போலீசில் கணவன் சரண்



காவேரிப்பாக்கம், மே.10

மனைவியுடன் தகாத உறவு வைத்த வங்கி ஊழியரை பைக்கில் அழைத்து சென்று கழுத்து மற்றும் மர்ம உறுப்பை அறுத்து கொலை செய்து விட்டு காவேரிப்பாக்கம் காவல் நிலையத்தில் கணவன் சரண் அடைந்தார். காஞ்சிபுரம் மாவட்டம், வெப்பேடு கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயில் தெருவை சேர்ந்தவர் லுவியரசன் (34). இவரது மனைவி கீர்த்தனா (26). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். லுவியரசனின் உறவினர் அதே பகுதியை சேர்ந்த அருண்குமார்(26). காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் வங்கியில் வேலை செய்து வந்தார். திருமணம் ஆகவில்லை.

இவருக்கும் கீர்த்தனாவுக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததாக கூறப்படுகிறது. இதையறிந்த லுவியரசன் மனைவியை அவ்வப்போது கண்டித்துள்ளார். இருப்பினும் கள்ளத்தொடர்பை கைவிடவில்லையாம். இதனால் இருவர் மீதும் லுவியரசன் கடும் ஆத்திரமடைந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு ராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் அடுத்த ஆலப்பாக்கம் கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று வரலாம் எனக்கூறி அருண்குமாரை லுவியரசன் காஞ்சிபுரத்தில் இருந்து பைக்கில் அழைத்து வந்துள்ளார்.

காவேரிப்பாக்கம் அடுத்த ஆலப்பாக்கம் கிராமத்தில் ஜல்லி அரவை மில் அருகே வந்தபோது பைக்கை நிறுத்திய லுவியரசன் தனது மனைவியுடனான கள்ளத்தொடர்பு குறித்து கேட்டுள்ளார். அப்போது, இருவருக்கும் இடையே கடும் தகராறு ஏற்பட்டது. இதில், ஆத்திரமடைந்த லுவியரசன், அருண்குமாரைதுணியால் கழுத்தைஇறுக்கியுள்ளார். அவர் மயங்கியதும் தான் மறைத்து வைத்திருந்த பேனா கத்தியால் கழுத்து மற்றும் அவரது மர்ம உறுப்பை அறுத்துள்ளார்.

இதில், அருண்குமார் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். அதன்பிறகு நள்ளிரவு காவேரிப்பாக்கம் காவல் நிலையத்திற்கு சென்ற லுவியரசன், அருண்குமாரை கொலை செய்து விட்டதாக கூறி சரணடைந்தார். இதையடுத்து, காவேரிப்பாக்கம் இன்ஸ்பெக்டர் சண்முகம் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், இதுகுறித்து வழக்குப் பதிந்து லுவியரசனை கைது செய்தனர். பின்னர், அவரை வாலாஜா கோர்ட்டில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர். கைது செய்யப்பட்ட லுவியரசன் மீது காஞ்சிபுரம் தாலுகா மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம், பாணாவரம் காவல் நிலையங்களில் கொலைஉட்படபல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதுகுறிப்படத்தக்கது.

# எடப்பாடி உத்தரவு கொடுத்தால் போதும் ஆயிரம் இளைஞர்களை திரட்டி துப்பாக்கி ஏந்தி போருக்கு ரெடி: ராஜேந்திரபாலாஜி உணர்ச்சிமயம்



சிவகாசி, மே.10

எடப்பாடி உத்தரவிட்டால் ஆயிரம் இளைஞர்களை திரட்டி துப்பாக்கி ஏந்தி போருக்கு செல்ல தயார் என முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி தெரிவித்தார். அதிமுக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் 71வது பிறந்தநாள் விழாவை கொண்டாடுவது தொடர்பாக அதிமுகஆலோசனைக்கூட்டம்விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு பின் அதிமுக அமைப்பு செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரபாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா போர் தொடங்கியுள்ளது. இந்த போர் பயங்கரவாதிகளுக்கு எதிரான போர். இந்திய ராணுவத்திற்கு முழு ஆதரவை அதிமுக தெரிவித்துள்ளது. இந்திய ராணுவத்துக்கு தேவையான வீரர்களை அனுப்ப விருதுநகர் மேற்கு மாவட்ட அதிமுக தயாராக உள்ளது.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டால், விருதுநகர் மாவட்டத்தில் இருந்து ஆயிரம் இளைஞர்களை திரட்டி இந்திய ராணுவத்துக்கு எனது தலைமையில் செல்ல தயாராக இருக்கிறோம். 10 நாள் துப்பாக்கி பயிற்சி கொடுத்தால் போதும். நாங்களும் களத்தில் இறங்கி போரிட தயார். நாங்கள் நேதாஜி வழி வந்தவர்கள். அவரது நெறிமுறைகளை கடைப்பிடிப்பவர்கள் நாங்கள். இவ்வாறு தெரிவித்தார்.

# கள்ளக்குறிச்சி பள்ளி கலவரத்தில் போலீஸ் மீது கல்வீச்சு 120 பேர் ஆஜராக உத்தரவு



கள்ளக்குறிச்சி, மே.10

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகில் உள்ள கனியாமூர் தனியார் பள்ளி விடுதியில் தங்கி பிளஸ்2 படித்து வந்த மாணவி ஸ்ரீமதி கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் தேதி விடுதியில் மர்மமான முறையில் உயிரிழந்தார். இதையடுத்து ஏற்பட்ட கலவரம் தொடர்பாக 53 சிறார்கள் உள்பட மொத்தம் 916 பேர் மீது 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 41 ஆயிரத்து 250 பக்கங்கள் கொண்ட இறுதி அறிக்கை கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் நீதிமன்றத்தில் சிறப்பு புலனாய்வு குழு போலீசார் தாக்கல் செய்தனர். இதில் காவல்துறை வாகனத்தை தீ வைத்து கொளுத்தி, போலீசார் மீது கல்வீசியதில் 124 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 3 பேர் சிறார்கள். மீதம் உள்ள 120 பேர் கள்ளக்குறிச்சி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்2ல் நேற்று ஆஜராகினர். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சத்தியநாரணயபிரசாத் மாரடைப்பால் நேற்று உயிரிழந்த நிலையில் கள்ளக்குறிச்சி நீதிமன்ற பணிகள் ஏதும் நடைபெறாததால் இந்த வழக்கு விசாரணைக்கு இன்று (8ம்தேதி) 120 பேரும் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அரசு போக்குவரத்துக்கழகங்களுக்கு புதிதாக 746 சிஎன்ஜி பேருந்துகள் தமிழ்நாடு அரசு டெண்டர்



சென்னை, மே.10

அரசு போக்குவரத்துக்கழகங்களுக்கு புதிதாக 746 சிஎன்ஜி பேருந்துகள் வாங்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியது. சிஎன்ஜி பேருந்துகளை பயன்படுத்துவதால் மாதத்துக்கு ஒரு பேருந்துக்கு ரூ.75,000 மிச்சமாவதாக அதிகாரிகள் தகவல் அளித்துள்ளனர்.

சிஎன்ஜி பேருந்தில் பராமரிப்பு செலவு, இயக்கச் செலவு குறைவால் மாதத்துக்கு ரூ.75,000 மிச்சமாகிறது. தயாரிப்பு பணி ஆணை வழங்கிய பிறகு 6 மாதங்களில் சிஎன்ஜி பேருந்துகள் பயன்பாட்டுக்கு வரும் என அதிகாரிகள் தகவல் அளித்துள்ளனர்.

# மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப துறைகளில் ஆங்கிலத்திற்கு இணையான புதிய தமிழ் கலைச்சொற்கள்: கல்வியியல் அதிகாரிகள் ஆலோசனை

சென்னை, மே.10

மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப துறைகளில் ஆங்கில சொற்களுக்கு இணையான புதிய தமிழ் கலைச்சொற்கள் உருவாக்குவது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடந்தது. தமிழ் வளர்ச்சி துறையின் 2022 23ம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையின்போது, 'வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப அனைத்து தளங்களிலும் தமிழ் பயன்பாட்டினை அதிகரிக்க செய்யும் வகையில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்றதுறைகளில்பயன்படுத்தப்படும் ஆங்கில சொற்களுக்கு இணையான புதிய தமிழ் கலைச்சொற்கள் உருவாக்கம் செய்வதற்காக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து துறைசார் வல்லுநர்களை கொண்ட குழுக்கள்அமைத்து, புதிய கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணைக்கிணங்க 202526ம் நிதியாண்டி ற்கு வேளாண்மை கலைச்சொல் அகராதி உருவாக்க திட்டமிடப்பட்டு, அதுதொடர்பான அலுவலர்சார் குழுவின் முதல் கூட்டம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககத்தில் நடந்தது. அகரமுதலி இயக்கக இயக்குநர் பவானி வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குநர் புனிதவதி, தமிழ் பல்கலைக்கழக அகராதியியல் துறை தலைவர் ஜாக்குலின் நேரிலும், தமிழ்நாடு பாடநூல் (ம) கல்வியியல் பணிகள் கழகத்தின் இணை இயக்குநர் சங்கர சரவணன் இணையவழியிலும் கலந்துகொண்டு வேளாண்மை கலைச்சொல் அகராதியை செம்மையுற வெளிக்கொணர்வதற்கான கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் அகரமுதலி இயக்கக பதிப்பாசிரியர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

# ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் பதிவேற்றத்திற்கு காலஅவகாசம்: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு



சென்னை, மே.10

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வுக்கான விண்ணப்பதாரர்கள் உரிய சான்றிதழை பதிவேற்றம் செய்ய கால அவகாசம் வழங்கி டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் ஜான் லூயிஸ் நேற்று வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் (நேர்முக தேர்வு பதவிகள்) 2 அடங்கிய கால்நடை உதவி மருத்துவர், கணக்கு அலுவலர் நிலை 3, கல்லூரி நூலகர், மேலாளர் (கிரேடு 3) (நிதி), முதுநிலை அலுவலர் (நிதி), உதவி மேலாளர் (கணக்கு), உதவி பொது மேலாளர் (திட்டங்கள் முதலீடு), உதவி மேலாளர் (திட்டங்கள்), உதவி பொது மேலாளர் (நிதி), கணக்கு அலுவலர், உதவி இயக்குனர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு விண்ணப்பதாரர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் சரிபார்ப்பு செய்த பின்னர், சில விண்ணப்பதாரர்கள் உரிய சான்றிதழ்களை குறைபாடாக, சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

# கூடங்குளம் அணுமின், வடசென்னை அனல்மின் நிலையத்தில் சிவில் பாதுகாப்பு பயிற்சி, ஒத்திகை: அரசு அறிவிப்பு

சென்னை, மே.10

கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம், அலகு2, அத்திப்பட்டு ஆகிய இடங்களில் சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடக்கிறது. இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிக்கை: ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, சில முக்கிய இடங்களில் சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு தலைமை செயலாளர் தலைமையில் கடந்த 6ம் தேதி மாநில மற்றும் ஒன்றிய அரசின் துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. கடந்த 7ம் தேதி மற்றும் நேற்று சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இன்று சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை, திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம், அலகு2, அத்திப்பட்டு ஆகிய இடங்களில் மாலை 4 மணியளவில் நடக்கிறது. இந்த பயிற்சியின் போது எதிரிகளின் தாக்குதல் மற்றும் எவ்விதமான அவசரக் கால சூழலையும் எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை பரிசோதிக்கப்படும். மாநில அவசர கால செயல்பாட்டு மையம் ஒத்திகை பயிற்சியை ஒருங்கிணைக்கும் மற்றும் இதில் மாவட்ட அதிகாரிகள்,

மாநில அதிரடிப்படை, ஊர்க்காவல் படையினர், சென்னை பெருநகர காவல்துறை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மத்திய தொழில் துறை பாதுகாப்புப் படை, பாரத சாரணர் மற்றும் சாரணியர் இயக்கம், தேசிய சாரணர் இயக்கம், தேசிய சேவை திட்ட தன்னார்வலர்கள் மற்றும் மருத்துவக் குழுக்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்த சிவில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய இடங்களில் ஆயத்த நிலையை சரிபார்த்துக் கொள்வதற்கான ஒரு ஒத்திகை மட்டுமே. மற்ற இடங்களில் உள்ள அனைத்து செயல்பாடுகளும் வழக்கம் போல இயங்கும். இப்பயிற்சி குறித்து பொதுமக்கள் எவ்வித பதற்றமோ அல்லது அச்சமோ கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மே 14ம் தேதி சினிமா ஸ்டிரைக்; பெப்சி அறிவிப்பு




சென்னை, மே.10

தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் (பெப்ஸி) இயக்குனர் சங்கம், ஒளிப்பதிவாளர்கள் சங்கங்கள், இசையமைப்பாளர் சங்கம் என மொத்தம் 23 சங்கங்களை உள்ளடக்கியது. தற்போது இந்த சம்மேளனத்திற்கு எதிராக தொழிலார்களின் வாழ்வை அழிக்கும் விதமாக சில நிர்வாகிகள் புதிய கூட்டமைப்பை உருவாக்க முயற்சிப்பதாக பெப்ஸி தலைவர் ஆர். கே. செல்வமணி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பெப்ஸி சம்மேளனத்தில் உள்ள 23 சங்கங்களில் மொத்தம் 25 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். 55 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் இந்த சம்மேளனத்தில் உள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் விதமாக திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தில் உள்ள சில நிர்வாகிகள் புதிதாக தமிழ் திரைப்பட தொழிலாளர்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்க முயற்சி செய்து வருகின்றனர்.

இதை எதிர்க்கும் விதமாக ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய உள்ளோம். அதன்படி, வரும் 14ம் தேதி தமிழகம் முழுவதும் நடைபெற உள்ள திரைப்படம், தொலைக்காட்சி, வலை தொடர், விளம்பரம் ஆகிய படப்பிடிப்பில் சம்மேளன தொழிலாளர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள். இந்த நாளில் போஸ்ட் புரொடக்சன்ஸ் போன்ற எந்தவொரு பணிகளும் நடைபெறாது. அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம். திரைப்பட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்க நினைக்கும் இது போன்ற தீய செயல்பாடுகளை தடுத்து திரைத்துறையில் சுமுக நிலையை தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகிய இருவரும் உருவாக்கி தர வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குமரி அருகே பரபரப்பு: பிளஸ் 2 மாணவருடன் பள்ளி மாணவி ஓட்டம்?

நாகர்கோவில், மே.10

குமரி அருகே தேர்வு விடுமுறையில் வீட்டில் இருந்த 9ம் வகுப்பு மாணவி இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கமான பிளஸ் 2 மாணவருடன் சேர்ந்து மாயமானதாக எழுந்த புகாரின்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குமரி மாவட்டம் அருமனை அருகே ஒரு கிராமத்தில் வசிக்கும் பெண் ஒருவர் தற்போது இரண்டாவது கணவருடன் வசித்து வருகிறார். அவரது முதல் கணவருக்கு பிறந்த 14 வயது மகளும் தன் தாயுடனே தங்கியுள்ளார். இந்த சிறுமி அருகேயுள்ள பள்ளிக்கூடத்தில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். தற்போது தேர்வு விடுமுறை என்பதால் வீட்டில் இருந்தார். மாணவி தினமும் தனது தாயின் செல்போனில் இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் பார்ப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.

மகள் ரீல்ஸ்தான் பார்க்கிறார் என தாயார் நினைத்தார். ஆனால் மாணவி, 17 வயது ஆண் நண்பர் ஒருவருடன் சாட்டிங் செய்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. பக்கத்து ஊரில் வசிக்கும் ஆண் நண்பர் பிளஸ் 2 படிக்கும் மாணவர் என கூறப்படுகிறது. இந்த விஷயம் அரசல் புரசலாக மாணவியின் பெற்றோருக்கு தெரியவந்தது. இது குறித்துமாணவியைதாயார்கண்டித்ததாககூறப்படுகிறது. இந்த நிலையில் சம்பவத்தன்று வீட்டில் இருந்த மாணவியை திடீரென காணவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த தாயார் தனது மகளை பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இதுகுறித்து மாணவியின் தாயார் அருமனை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மாணவியுடன் பேசிய மாணவனும் திடீரென மாயமாகியுள்ளதாக கூறப்படுகிறது. எனவே மாணவன்தான் மாணவியை அழைத்து சென்றிருக்கலாம் என போலீசார் கருதுகின்றனர். அவர்கள் இருவரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வெயில்: கரூர் பரமத்தியை வெப்ப மண்டல பகுதியாக அறிவிக்க கோரிக்கை

கரூர், மே.10

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் வெயில் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் பாலைவனமாக உருவெடுத்து வரும் கரூர் மாவட்டத்தில் அடர்ந்த வனங்களை பெருக்க மரங்களை நடவும், கரூர் பரமத்தி பகுதியை வெப்ப மண்டல பகுதியாக அறிவிக்கவும் கோரிக்கை எழுந்துள்ளது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தின் போது அதிக வெயில் பதிவாகும் பகுதியாக உள்ளது கரூர் பரமத்தி. வனப்பகுதி குறைவாக உள்ள கரூர் மாவட்டத்தில் சுட்டெரிக்கும் வெயிலால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். கரூர் பரத்தி பகுதியில் கல்குவாரிகள், தொழிற்சாலைகள் அதிகம் இருப்பதாலும் வெயில் சதத்தை தொட்டு நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருவதாக கூறப்படுகிறது.



இந்த வெயில் கொடுமையால் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்கள் சாலைகளில் நடமாட முடியாமல் மிகுந்த சிரமப்பட்டு வீடுகளிலேயே முடங்கும் நிலை ஏற்படுகிறது. தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மரங்களை அகற்றியதாலும் வெயில் தாக்கம் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கின்றனர். அதேபோல மாவட்டத்தில் 33% வனங்கள் சூழ்ந்து இருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டிலேயே மிக குறைவாக கரூர் மாவட்டத்தில் வெறும் 6.09% மரங்கள் மட்டுமே உள்ளதாக கூறுகின்றனர். குறிப்பாக கரூர் பரமத்தி, அரவக்குறிச்சி ஆகிய பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு, கால்நடைகள், தீவனங்கள் கருகிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றனர். கரூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் நீரை சேமித்தால் வறட்சியை சமாளிக்கலாம் என்பதே இந்த பகுதி மக்களின் கருத்தாக உள்ளது.

# சென்னை விமான நிலையம், துறைமுகத்தில் பணியாற்றிய 273 சுங்கத்துறை அதிகாரிகள் கூண்டோடு பணியிடமாற்றம்

சென்னை, மே.10

சென்னை விமான நிலைய கார்கோ பிரிவு மற்றும் சென்னை துறைமுகம் ஆகிய இடங்களில் பணியாற்றி வந்த 273 சுங்கத்துறை அதிகாரிகள் கூண்டோடு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை விமான நிலைய சுங்கத்துறை முதன்மை ஆணையராக இருந்த சீனிவாச நாயக், ஜிஎஸ்டி வரித்துறைக்கு மாற்றப்பட்டார். இதையடுத்து சென்னை விமான நிலைய சுங்கத்துறை முதன்மை ஆணையராக டெல்லி சுங்கத்துறை ஆணையராக இருந்த தமிழ் வளவன் பதவி உயர்வுடன் கடந்த ஏப்ரல் 21ம் தேதி பொறுப்பேற்றார். இந்நிலையில், சென்னை சுங்கத்துறையில் பணியாற்றி வந்த 273 அதிகாரிகள் அதிரடியாக ஒரே நேரத்தில் கூண்டோடு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதில், 41 கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், 93 துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், 139 இன்ஸ்பெக்டர்கள், சூப்பிரண்ட்கள் என மொத்தம் 273 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை விமான நிலைய சுங்கத்துறையில் பணியாற்றியோர், விமான நிலைய கார்கோ சுங்கப் பிரிவுக்கும், சென்னை துறைமுகம், சென்னை ராஜாஜி சாலையில் உள்ள சுங்கத்துறை தலைமை அலுவலகம் மற்றும் ஜிஎஸ்டி வரி விதிப்பு பிரிவு ஆகியவற்றில் இடமாற்றமும், அதேபோல், ஜிஎஸ்டி பிரிவில் உள்ளவர்கள், சென்னை விமான நிலைய சுங்கத்துறை, விமான நிலைய கார்கோ




பிரிவு மற்றும் சென்னை துறைமுகம் சுங்கத்துறை அலுவலகங்களுக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை விமான நிலைய சுங்கத்துறைக்கு மேலும் புதிதாக துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் 10 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மிக முக்கிய பொறுப்புகளான, கடத்தல் தங்கத்தை கண்டுபிடித்து பிடிக்கக்கூடிய ஏர் இன்டலிஜென்ட், போதைப் பொருள் கடத்தலை கண்டுபிடிப்பது, வெளிநாடுகளில் இருந்து கொரியர் பார்சல்களில் போதை மாத்திரைகள் வருவதை கண்டுபிடிப்பது போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட உள்ளனர். சுங்கத்துறையில் ஒரே நேரத்தில் 273 அதிகாரிகள் ஒட்டுமொத்தமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு, சென்னை விமான நிலையத்தில் மிக முக்கிய பொறுப்புகளான கடத்தல் தங்கத்தை பிடிக்கும் ஏர் இன்டலிஜென்ட், போதைப் பொருட்கள் கடத்தல் கண்டுபிடிப்பது போன்றவைகளில் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து சுங்கத்துறை அதிகாரிகள் தரப்பில் கூறும்போது, ''ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் அதிகாரிகள் இடமாற்றம் வழக்கமாக நடக்கும்'' என்றனர்.

# கட்டிலில் இருந்து தவறி விழுந்த 4 வயது சிறுவன் உயிரிழப்பு

கன்னியாகுமரி மே.10

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாரை அடுத்த விளாக்கோடு பகுதியைச் சேர்ந்தவர் ஆன்றனி ரமேஷ் (45 வயது). இவர் காங்கரை பகுதியில் ஸ்டூடியோ நடத்தி வருகிறார். இவருக்கு மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். எய்டன் நினோ (4 வயது) என்ற மகனும் இருந்தான்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலையில் சிறுவன் எய்டன் நினோ புத்தன் கடை ஆர்.சி. தெருவில் உள்ள உறவினர் வீட்டில் கட்டிலில் ஏறி விளையாடி



கொண்டிருந்தான். அப்போது தவறி கீழே விழுந்தான். இதில் மயக்கமடைந்த சிறுவனை உறவினர்கள் மீட்டு சிகிச்சைக்காக குலசேகரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு சிறுவனுக்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி பரிதாபமாக இறந்தான். இதுகுறித்து திருவட்டார் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சட்டமன்ற தேர்தலுக்காக பாஜவுடன் கூட்டணி அதிமுக அணியில் மேலும் பல கட்சிகள் இணையும்: எடப்பாடி பழனிசாமி பேட்டி

ஓமலூர், மே.10

அதிமுக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணையும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார். சேலம் மாவட்டம், ஓமலூர் அதிமுக அலுவலகத்தில் சேலம் புறநகர் மற்றும் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், கலந்து கொண்ட அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது: அதிமுகவை பொறுத்தவரை ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்காக தொடர்ந்து உழைத்து வருகிறோம். நாட்டில் நிலவும் பிரச்னைகளை ஊடகங்கள் முழுமையாக வெளியிட வேண்டும். எதிர்க்கட்சிகள் மீது வீணாக பழி சொல்கின்றனர்.

டெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தபோது தமிழகத்தின் நலனுக்காக பல்வேறு கோரிக்கைகளை மனுவாக கொடுத்தோம். அந்த கோரிக்கைகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு, மெட்ரோ ரயில் 2ம்



கட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, சாதிவாரி கணக்கெடுப்பு அறிவிப்பு என எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிய உள்துறை அமைச்சருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். சட்டமன்ற தேர்தலுக்காக பாஜவுடன் கூட்டணி வைத்துள்ளோம். தேர்தலுக்கு இன்னும் 9 மாத காலம் இருக்கிறது. அதற்குள்ளாக இன்னும் பல கட்சிகள் எங்களது கூட்டணியில் இணையும்.

இவ்வாறு அவர் கூறினார். தேமுதிக பொருளாளர் சுதீஷ், தங்கள் கட்சிக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்க அதிமுக உறுதி அளித்திருந்ததாக கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு, இதுகுறித்து இன்னொரு நாளில் விரிவாக பதிலளிக்கிறேன் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

# லிப்ட் தருவதாக கூறி இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை; வாலிபர் கைது

காஞ்சிபுரம், மே.10

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே செரப்பனஞ்சேரி பகுதியை சேர்ந்த 20 வயதுடைய இளம்பெண் ஒரகடம் பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலையில் வேலை செய்து வந்தார். நேற்று முன்தினம் இரவு பணி முடிந்து வீட்டுக்கு நாவலூர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் ஒருவர் லிப்ட் தருவதாக கூறி மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு இளம்பெண்ணை ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு அழைத்து சென்று பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண், கூச்சலி ட்டபடி அந்த நபரை தாக்கி



விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார். இது குறித்து பாதிக்கப்பட்ட இளம்பெண் கூடுவாஞ்சேரி அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

கூடுவாஞ்சேரி அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து பெண்ணிடம் பாலியல் தொந்தரவில் ஈடுபட்ட ஒரகடம் பண்ருட்டி ஏலக்காய் மங்கலம் பகுதியை சேர்ந்த காண்டீபன் (வயது 34) என்பவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ பள்ளிகளில் 25% இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்த வழக்கு: முதன்மை செயலர் பதிலளிக்க ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, மே.10

சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகளில் 25 சதவீத இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்தக் கோரிய வழக்கில் பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர் உள்ளிட்டோர் பதிலளிக்குமாறு ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது. மதுரையைச் சேர்ந்த இரணியன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களின் கல்வியை, கல்வி பெறும் உரிமை சட்டம் உறுதிப்படுத்தியது. இதன்படி தனியார் பள்ளிகள் 25 சதவீத இட ஒதுக்கீட்டை பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு வழங்க வேண்டும். இது, சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகளுக்கும் பொருந்தும். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிபிஎஸ்இ பள்ளிகளில் இந்த இடஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் முறையாக வழங்கப்படுவதில்லை. அரசு தரப்பில் அதற்கான கட்டணம் முறையாக செலுத்தப்படுவதில்லை என காரணம் கூறப்படுகிறது.

இதுபோன்ற பள்ளிகள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக எவ்வித



மான அறிவுறுத்தல்களும் இல்லை என முதன்மை மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து மனு அளித்தும் நடவடிக்கை இல்லை. எனவே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகளிலும் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான 25 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை முறையாக அமல்படுத்துமாறு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் தண்டபாணி, சக்திவேல் ஆகியோர் மனுவிற்கு தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையின் முதன்மைச் செயலர், சிபிஎஸ்இ மண்டல அலுவலர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் இயக்குநர், தனியார் பள்ளிகளின் இயக்குநர் ஆகியோர் தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை 4 வாரம் தள்ளி வைத்தனர்.

# மெட்ரோ பணிகள் நிறைவு: சாந்தோம், லூப் சாலைகளில் நாளை முதல் வாகனங்கள் செல்ல அனுமதி



சென்னை, மே.10

சாந்தோம் நெடுஞ்சாலையில் மெட்ரோ ரெயில் பணிகள் நிறைவு பெற்றதை அடுத்து நாளை முதல் சாந்தோம் மற்றும் லூப் சாலைகளில் இருவழிகளிலும் வாகனங்கள் செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நெரிசல் மிகுந்த நேரங்களான ( காலை 7.30 மணி முதல் 11 மணி மற்றும் மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை ) மட்டும் ஒரு வழிகளில் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும் என போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

கார்னீஸ்வரர் கோவில் தெரு, சாந்தோம் நெடுஞ்சாலையில் மெட்ரோ ரெயில் பணி காரணமாக, ஒருவழிப் போக்குவரத்து முறையானது (லூப் சாலை வழியாக) கடந்த ஆண்டு நடைமுறை படுத்தப்பட்டது. தற்போது சாந்தோம் நெடுஞ்சாலையில் ஒரு பகுதி மெட்ரோ பணி முடிந்த நிலையில், நெரிசல் இல்லாத நேரங்களில் நாளை (09.05.2025) முதல் சாந்தோம் நெடுஞ்சாலை, லூப் சாலையில் மீண்டும் இருவழிப் போக்குவரத்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நெரிசல் மிகுந்த நேரங்களில் (காலை 07.30 மணி முதல் 11.00 மணி வரை மற்றும் மாலை 17.00 மணி முதல் 20.30 மணி வரை) அதிக போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் ஒருவழிப் போக்குவரத்து வழக்கம் போல் தொடரும். வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாமக மாநாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்: உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மே.10

மாமல்லபுரம் பாமக மாநாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் கண்டிப்புடன் பின்பற்றப்படும் என வடக்கு மண்டல ஐ.ஜி. யிடம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று பாமக தரப்புக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது.

எந்த அசம்பாவித சம்பவங்களும் நடைபெறாமல் மாநாடு நடத்தப்ப




டும் என பாமக தரப்பில் உறுதி அளித்துள்ளது. மாநாட்டு நிபந்தனைகளை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது.

# ஏலகிரிமலையில் பலத்த காற்றுடன் மழை: மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு



ஏலகிரி, மே.10

ஏலகிரி மலையில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால் மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் ஒயர்கள் அறுந்து விழுந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வெயில் கொளுத்தி வந்தாலும் கடந்த சில தினங்களாக மாலை நேரத்தில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. வழக்கம்போல் நேற்று மாவட்டத்தில் ஏலகிரி மலை, ஜோலார்பேட்டை பகுதிகளில் வெயில் கொளுத்தியது. இந்நிலையில் இரவு 10 மணியளவில் ஏலகிரிமலை பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் பல இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தது. மேலும் மின்கம்பங்களும் சில இடங்களில் சாய்ந்தது. இதனால் பல இடங்களில் மின்சார ஒயர்கள் அறுந்து தொங்கியது.

நள்ளிரவு 12 மணியளவில் ஏலகிரி மலையின் முக்கிய சாலையான அத்தனாவூர்நிலாவூர் சாலையில் ராட்சத மரம் முறிந்து விழுந்தது. இதனால் மலையில் இருந்து இரவில் இறங்கிய சுற்றுலா பயணிகள் செய்வதறியாது திகைத்து நின்றனர். இதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றது.

இதுகுறித்து நெடுஞ்சாலை மற்றும் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் போலீசார் சென்று, ஜேசிபி மூலம் மரத்தை வெட்டி அகற்றினர். சுமார் ஒருமணி நேரத்திற்கு பின்னர் போக்குவரத்து சீரானது. இதற்கிடையில் மின் கம்பிகள் அறுந்து விழுந்ததால் 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

# மாமல்லபுரம் சித்திரை முழு நிலவு மாநாட்டுக்கான நிபந்தனைகளை பின்பற்றுக: ஐகோர்ட் திட்டவட்டம்

சென்னை, மே.10

மாமல்லபுரம் சித்திரை முழு நிலவு மாநாட்டுக்கான நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. சமூகநீதி, சமூக நல்லிணக்கம் உள்ளிட்டவற்றை வலியுறுத்தி வன்னியர் சங்கத்தின் சார்பில் மாமல்லபுரம் சித்திரை முழுநிலவு இளைஞர் பெருவிழா மாநாடு வரும் மே 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பாமக சார்பில் மே 1 1 இல் நடக்கும் மாமல்லபுரம் மாநாட்டிற்கு தடை விதிக்கக் கோரி ஸ்ரீபெரும்புதூரை சேர்ந்த முத்துக்குமார் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் என். மாலா மற்றும் ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர, மாநாட்டுக்கு 47 நிபந்தனைகளுடன் கடந்த 5ம் தேதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிபந்தனைகளை மீறினால் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். பாமக தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், காவல்துறை விதித்துள்ள அத்தனை நிபந்தனைகளும் கண்டிப்



புடன் பின்பற்றப்படும். எந்த அசம்பாவித சம்பவங்களுக்கும் இடம் கொடுக்காமல் அமைதியான முறையில் மாநாடு நடத்தப்படும் என்றும் உறுதி அளித்தார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், மாநாட்டுக்கு அனுமதி அளித்து பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கண்டிப்புடன் பின்பற்றப்படும் என்ற உத்தரவாத மனுவை வடக்கு மண்டல ஐஜியிடம் வழங்க வேண்டும். மாநாட்டுக்கு வருவோர் ஆயுதங்கள், வெடி பொருட்களை எடுத்து வரக் கூடாது. மாநாட்டின் பாதுகாப்புக்காக கூடுதல் போலீசாரை பணியமர்த்த அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேவைப்பட்டால் கூடுதல் நிபந்தனைகளை விதிக்கலாம் என அரசுக்கு அனுமதி அளித்தும் உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்தனர்.

# தூத்துக்குடி என்டிபிஎல் அனல் மின்நிலையத்தில் ஊழியர்கள் ஸ்டிரைக்: மின்உற்பத்தி பாதிப்பு

தூத்துக்குடி, மே.10

தூத்துக்குடி என்டிபிஎல் அனல் மின்நிலையத்தில் ஊழியர்கள் ஸ்டிரைக்கால் 1000 மெகா வாட் மின்உற்பத்தி நிறுத்தம் செய்யபட்டுள்ளது. ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஒப்பந்த தொழிலாளர்கள் 22வது நாளாக வேலை நிறுத்தம் செய்கின்றனர். ஒப்பந்த தொழிலாளர்களின்



வேலை நிறுத்தம் காரணமாக 2 யூனிட்டுகளில் மின்உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

10.5.2025

# இந்திய ராணுவத்தை விமர்சித்த சென்னை பேராசிரியை பணியிடை நீக்கம்



பேராசிரியை லோராவை பணியிடை நீக்கம் செய்து கல்லூரி நிர்வாகம் உத்தர விட்டுள்ளது.

சென்னை, மே.10

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பதிலடி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

இந்நிலையில் இந்திய ராணுவத்தை விமர்சித்து கருத்து தெரிவித்த சென்னை பேராசிரியை பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரி பகுதியில் உள்ள பிரபல தனியார் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வரும் லோரா என்பவர், சமூக வலைத்தளங்களில் 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து விமர்சிக்கும் வகையில் கருத்து பதிவிட்டதாக தெரிகிறது.

அவரது பதிவு சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட

# தமிழ்நாட்டில் நாளை அணுமின், அனல்மின் நிலையங்களில் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை



சென்னை, மே.10

மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் படி சில முக்கிய இடங்களில் போர்க்கால பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு அவர்கள் தலைமையில் கடந்த 6ம் தேதி மாநில மற்றும் மத்திய அரசின் துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. நேற்று மற்றும் இன்று பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நாளை (வெள்ளிக்கிழமை) போர்க்கால பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை, கூடங்குளம் அணுமின் நிலையம், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம், அலகு 2, அத்திப்பட்டு ஆகிய இடங்களில் மாலை 04.00 மணியளவில் நடக்க உள்ளது. இந்த பயிற்சியின்போது எதிரிகளின் தாக்குதல் மற்றும் எவ்விதமான அவசரக்கால சூழலையும் எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை பரிசோதிக்கப்படும். மாநில அவசர கால செயல்பாட்டு மையம் இந்த ஒத்திகை பயிற்சியினை ஒருங்கிணைக்கும் மற்றும் இதில் மாவட்ட அதிகாரிகள், மாநில அதிரடிப் படை, ஊர்க்காவல் படையினர், சென்னை பெருநகர காவல்துறை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மத்திய தொழில் துறை பாதுகாப்புப் படை, பாரத சாரணர் மற்றும் சாரணியர் இயக்கம், தேசிய சாரணர் இயக்கம், தேசிய சேவை திட்ட தன்னார்வலர்கள் மற்றும் மருத்துவக் குழுக்கள் பங்கேற்க உள்ளனர். இந்த போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய இடங்களில் ஆயத்த நிலையினை சரிபார்த்துக் கொள்வதற்கான ஒரு ஒத்திகை மட்டுமே ஆகும். மற்ற இடங்களில் உள்ள அனைத்து செயல்பாடுகளும் வழக்கம் போல இயங்கும். இப்பயிற்சி குறித்து பொதுமக்கள் எவ்வித பதற்றமோ அல்லது அச்சமோ கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# வேதாரண்யத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.35 லட்சம் கஞ்சா பறிமுதல்; இளைஞர் கைது

நாகப்பட்டினம், மே.10

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த தோப்புத்துறையில் வேதாரண்யம் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு சொகுசு காரை மறித்து சோதனை செய்தனர். அந்த காரில் மூட்டை, மூட்டையாக கஞ்சா பொட்டலங்கள் இருந்தது தெரியவந்தது.

இதனைத்தொடர்ந்து காரில் வந்தவரிடம் நடத்திய விசாரணையில் அவர் ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டம் கூடூர் தாலுகா பாலிசெர்லாவாரிபாலத்தை சேர்ந்த வெங்கடகிருஷ்ணா ரெட்டி, என்பதும், ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்பட்ட கஞ்சாவை வேதாரண்யத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த முயற்சி செய்ததும் தெரியவந்தது. இதையடுத்து காரில் இருந்த ரூ.35 லட்சம் மதிப்பிலான 105 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார், வெங்கடகிருஷ்ணா ரெட்டியை கைது செய்தனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட சொகுசு காரையும் பறிமுதல் செய்தனர். பின்னர் வெங்கடகிருஷ்ணா ரெட்டியை போலீசார், கோர்ட்டில் ஆஜர் செய்து திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

# பைக் காணவில்லை என இளம்பெண் புகார்: லாட்ஜ்க்கு வர சொன்ன காவலர்..அடுத்த நடந்த சம்பவம்



சென்னை, மே.10

ஆவடியை அடுத்த சென்னீர்குப்பம் பகுதியை சேர்ந்த திருமணமான இளம்பெண் கடந்த மாதம் தனது கணவரின் பைக் திருடு போனதாக ஆவடி போலீஸ் நிலையத்தில் புகார் தெரிவித்தார். இது பற்றி குற்றப்பிரிவு போலீசில் காவலராக பணியாற்றி வரும் திருப்பத்தூரை சேர்ந்த ஹரிதாஸ் (வயது 42) உள்ளிட்ட போலீசார் விசாரித்தனர். பின்னர் ஆவடி பகுதியில் அந்த பைக் மீட்கப்பட்டு இளம்பெண்ணின் கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தநிலையில் புகார் தெரிவித்த இளம்பெண்ணை தொடர்பு கொண்ட போலீஸ்காரர் ஹரிதாஸ் பேசினார். அப்போது அந்த இளம்பெண்ணிடம் உங்களின் பைக்கை கஷ்டப்பட்டு கண்டுபிடித்திருக்கிறோம். அதனால் என்னை பார்த்து கவனியுங்கள் என்று கூறியிருக்கிறார்.

அதற்கு அந்தப் பெண், கவனியுங்கள் என்றால் என்ன கேட்டிருக்கிறார். உடனே காவலர் ஹரிதாஸ், 15ஆயிரம் கொடுங்கள் போதும் என தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. அதற்கு அந்தப் பெண், அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என தெரிவித்திருக்கிறார். இதையடுத்து காவலர் ஹரிதாஸ் அந்தப் பெண்ணிடம் பேரம் பேசியதாக சொல்லப்படுகிறது. பின்னர் பணம் இல்லை என்றால் பரவாயில்லை. நாம் இருவரும் உல்லாசமாக இருக்கலாம் வா என்று ஆவடியில் குறிப்பிட்ட லாட்ஜ்க்கு வருமாறு அழைத்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த இளம்பெண் என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தார். பின்னர் இது குறித்து உறவினர்களிடம் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து இளம்பெண்ணின் உறவினர்கள் செல்போனில் வீடியோவாக பதிவு செய்தபடியே குறிப்பிட்ட விடுதிக்கு சென்று அங்கு காத்திருந்த போலீஸ்காரர் ஹரிதாசை கையும் களவுமாக பிடித்தனர். இது பற்றி ஆவடி போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

போலீசார் வழக்குப்பதிவு செய்து ஹரிதாசை கைது செய்தனர். பின்னர் அவரை புழல் சிறையில் அடைந்தனர்.

போலீஸ்காரர் ஹரிதாஸ் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கோயமுத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் 26வது வார்டில்பயணியர்மில்ரோட்டில்உள்ளகோவைமாநகராட்சி மேல் நிலைப்பள்ளியில் மாமன்ற உறுப்பினர் சித்ரா வெள்ளியங்கிரி 12 ஆம் வகுப்பு மாணவர்கள் நேற்று வந்த பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி விகிதம் மாணவ மாணவியர் கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 11% வீகிதம் கூடுதல்தேர்ச்சிவிகிதம்அதிகரித்துஇதற்குதூண்டுகோலாக அதிக மதிப்பெண் பெற காரணமாக இருந்த பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி பூங்கோதை அவர்கள் மற்றும் பணிரெண்டாம் வகுப்பு ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தலைமை ஆசிரியர் அவர்களுக்கு பயனாடை அணிவித்து இனிப்பு வழங்கி மாமன்ற உறுப்பினர் சித்ரா வெள்ளியங்கிரி சிறப்பு செய்தார் உடன் வடக்கு மண்டல சுகாதார அலுவலர் திரு முருகன் மற்றும் எஸ் பி வெள்ளியங்கிரி சுரேஷ் பெருமாள் விக்கி சக்தி வேல் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்

# சேப்பாக்கம் பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களிடம் கண்ணன் மற்றும் பச்சையப்பன் குடும்பத்தினர் பேட்டி




சென்னை மேற்கு சைதாப்பேட்டையில் வாசித்து வரும் கண்ணன் மற்றும் பச்சையப்பன் குடும்பத்தினர் கடந்த 40 வருடங்களாக சாரதி நகர் பூர்விக வீட்டில் வசித்து வருகிறார்கள். இவர்களை ஏமாற்றி போலி பத்திரத்தை தயார் செய்து அந்த வீட்டை விற்பனை செய்ய முயற்சித்துள்ளார் சென்னை மேற்கு சைதாப்பேட்டையை சேர்ந்த அதிமுக பகுதி செயலாளர் சுகுமார் மற்றும் சைதா ப்பேட்டை நீதிமன்ற வழக்கறிஞர் சதீஷ்குமார். அவர் அந்த வீட்டை விற்பதற்கும் முயற்சி செய்துள்ளதாக தகவல் கிடைத்த பின்னர் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தும் காவல்துறையினர் அடுத்த 2026 இல் அதிமுக ஆட்சி வந்தால் எங்களை பணியில் இருந்து நீக்கி விடுவார்கள் என்று மிரட்டி உள்ளதாக தெரிவித்தனர். ஆகையால் சேப்பாக்கம் பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களிடம் இது குறித்து கண்ணன் மற்றும் பச்சையப்பன் குடும்பத்தினர் பேட்டி அளித்தனர்.

# யோகி பாபுவின் "ஜோரா கைய தட்டுங்க" டிரெய்லர் வெளியீடு




நடிகர் யோகி பாபு தற்போது தமிழ் சினிமாவில் காமெடி நடிகராக மட்டுமல்லாமல் ஹீரோவாகவும் பல படங்களில் நடித்து வருகிறார். நெல்சன் இயக்கிய 'கோலமாவு கோகிலா' படத்தில் யோகி பாபுவின் நடிப்பு பட்டிதொட்டி எங்கும் பரவியது. இவர் தற்போது ரஜினியின் 'ஜெயிலர் 2' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில், வாமா என்டர்டெயின்மென்ட் சார்பில் வினீஷ் மில்லினியம் இயக்கத்தில் 'ஜோரா கைய தட்டுங்க' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தினை ஜாகிர் அலி தயாரித்துள்ளார். இதில் ஹரிஸ் பேரடி, வாசந்தி, ஜாஹிர் அலி, மணிமாறன். சாந்தி தேவி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மாயாஜால வித்தையை நிகழ்த்தும் கலைஞரின் வாழ்வியலை மையப்படுத்தி இப்படம் உருவாகி உள்ளது. இப்படம் வருகிற 16ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது.

# சீமானின் "தர்மயுத்தம்" பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு




நடிகர் மற்றும் இயக்குனர் சீமான் தற்போது முழு நேர அரசியலில் பிஸியாக இருந்தாலும், அவ்வப்போது சில படங்களில் நடித்து வருகிறார் என்பதும், சமீபத்தில் கூட அவர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் உருவாகி வரும் 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' என்ற திரைப்படத்தில் சீமான் விவசாயியாக நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. மு.களஞ்சியம் சீமானை நாயகனாக வைத்து ஒரு படத்தை இயக்கி வருகிறார்.

சீமான் முக்கிய வேடத்தில் நடிக்க இருக்கும் படம் குறித்து அறிவிப்பு சமீபத்தில் வெளியானது. இந்த படத்திற்கு 'தர்மயுத்தம்' என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ளது.

'தர்மயுத்தம்' என்ற டைட்டில், ரஜினிகாந்த் நடித்த திரைப்படம் ஒன்று கடந்த 1979ம் ஆண்டு வெளியான நிலையில், தற்போது கிட்டத்தட்ட அதே டைட்டில் ஒரு திரைப்படம் அறிவிக்கப்பட்டுள்ளது. 'தீர விசாரிப்பதே மெய்' என்ற ஹேஷ்டேக் உடன் வெளியான இந்த போஸ்டரில், சீமான், அனு சித்தாரா மற்றும் ஆர்கே சுரேஷ் ஆகியோர் இந்த படத்தில் முக்கிய கேரக்டரில் நடிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர் சுப்பிரமணியம் என்பவர் எழுதி இயக்கும் இந்த படத்தை ஆதம்பாவா மற்றும் சிவக்குமார் ஆகியோர் தயாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் சீமான், ஆர்.கே.சுரேஷ், களஞ்சியம் இணைந்து நடிக்கும் 'தர்மயுத்தம்' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை இயக்குனர் சீனு ராமசாமி வெளியிட்டுள்ளார்.

# "பரமசிவன் பாத்திமா" படத்தின் "நா மல்லி" வீடியோ பாடல் வெளியீடு




தமிழ் சினிமாவில் குறிப்பிடத்தக்க நடிகர்களில் ஒருவர் விமல். இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான 'விலங்கு' வெப் தொடர் மற்றும் 'சார்' என்ற திரைபடமும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன. இவர் தற்போது லட்சுமி கிரியேஷன்ஸ் சார்பில் தனது 34வது படமான 'பரமசிவன் பாத்திமா' என்ற படத்தில் நடித்துள்ளார்.

இந்த படத்தை 'தமிழ்க்குடிமகன்' என்ற திரைப்படத்தை இயக்கி பாராட்டுக்களை பெற்ற இசக்கி கார்வண்ணன் இயக்கியுள்ளார். இப்படத்தில் விமல் கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து கதாநாயகியாக சாயாதேவி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் எம்.எஸ்.பாஸ்கர், மனோஜ் குமார், ஸ்ரீ ரஞ்சனி, ஆதிரா, அருள்தாஸ், கூல் சுரேஷ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இந்த படம் காதலுக்கு மதங்கள் எவ்வாறு தடையாக நிற்கின்றன என்பது குறித்து பேசும் வகையில் உருவாகி வருகிறது. 'பரமசிவன் பாத்திமா' படத்தின் டிரெய்லரை நா.த.க ஒருங்கிணைப்பாளர் சீமானும், தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலையும் இணைந்து தங்களது எக்ஸ் தளத்தில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. படத்தின் டிரெய்லர் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில், படத்தின் முதல் பாடலான 'நான் மல்லி' பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்பாடலை ஏகாதேசி வரிகளில் பிரியா ஹமேஷ் பாடியுள்ளார். இப்பாடலில் கூல் சுரேஷ் நடனமாடிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் தாக்குதல் ஐ.பி.எல். போட்டி பாதியிலேயே நிறுத்தம்



இமாசலபிரதேச மாநிலம் தர்மசாலாவில் இன்று இரவு 7.30 மணிக்கு தொடங்கிய ஆட்டத்தில்பஞ்சாப்கிங்ஸ்டெல்லிகேப்பிட்டல்ஸ்அணிகள்மோதின.தர்மசாலாவில் மழை பெய்ததால் போட்டிக்கான டாஸ் போடுவதில் தாமதம் ஏற்பட்டது. மழை நின்றதும் போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணியின் கேப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் பேட்டிங்கை தேர்வு செய்தார் . அதன்படி பஞ்சாப் அணி முதலில் பேட்டிங் செய்தது.

இந்த நிலையில், பஞ்சாப் அணி 10.1 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 122 ரன்கள் எடுத்திருந்தபோது போட்டி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் டிரோன் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் பாதுகாப்பு காரணங்களுக்காக ஐ.பி.எல். போட்டி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நிறுத்தப்பட்ட நிலையில் கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். மேலும் மைதானத்தில் இருந்த ரசிகர்களும் வெளியேற்றப்பட்டனர்.

# ஐபிஎல்: டெல்லி அணிக்கு எதிராக பஞ்சாப் பேட்டிங் தேர்வு



இமாசலபிரதேச மாநிலம் தர்மசாலாவில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் 58வது ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த நிலையில், தர்மசாலாவில் மழை பெய்ததால் இந்த போட்டிக்கான டாஸ் போடுவதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது மழை நின்ற பின் போட்டி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த போட்டிக்கானடாஸ்போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணியின் கேப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் பேட்டிங்கை தேர்வு செய்தார் . அதன்படி பஞ்சாப் அணி முதலில் பேட்டிங் செய்கிறது.

# ஐபிஎல் வரலாற்றில் தோனி புதிய சாதனை



நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாட்டின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த கொல்கத்தா 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 179 ரன்கள் எடுத்தது. இதையடுத்து களமிறங்கிய சென்னை 19.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 183 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் கொல்கத்தாவை 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இப்போட்டியில் இறுதி ஓவரில் சிக்ஸ் அடித்து வெற்றிக்கு உதவிய கேப்டன் எம்.எஸ். தோனி இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன்மூலம் ஐபிஎல் வரலாற்றில் 100 முறை அவுட் ஆகாமல் இருந்து சி.எஸ்.கே கேப்டன் தோனி போட்டியை முடித்துக் கொடுத்து சாதனை படைத்துள்ளார்.

# ஐபிஎல் : கொல்கத்தா வீரர் வருண் சக்கரவர்த்திக்கு அபராதம்



நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாட்டின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த கொல்கத்தா 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 179 ரன்கள் எடுத்தது. இதையடுத்து களமிறங்கிய சென்னை 19.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 183 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் கொல்கத்தாவை 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்த போட்டியில் ஐபிஎல் விதிமுறைகளை மீறியதாக கொல்கத்தா வீரர் வருண் சக்கரவர்த்திக்கு, போட்டிக்கான ஊதியத்தில் இருந்து 25 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.